HSS

9 - ஆம் வகுப்பு

காலம் : 3.00 மணி

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2024

# தமிழ்

மதிப்பெண்கள் :100

பகுதி - I ( மதிப்பெண்கள் : 15 )

குறிப்புகள் : I ) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. II) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

அ) சரியான விடையைத் தேர்வு செய்க. 15×1=15

1. தமிழ்விடு தூது ____ என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.
   அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை
   இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்
2. மல்லல் மூதூர் வயவேந்தே - கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?
   அ) மறுமை ஆ) பூவரசு மரம் இ) வளம் ஈ) பெரிய
3. ஐம்பெருங்குழு, எண்பேராயம் - சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்
   அ) திசைச்சொற்கள் ஆ) வடசொற்கள்
   இ) உரிச்சொற்கள் ஈ) தொகைச்சொற்கள்
4. தமிழ்நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது?
   அ) தேசியத் திறனறித் தேர்வு ஆ) ஊரகத் திறனறித் தேர்வு
   இ) தேசியத் திறனறி, கல்வி உதவித் தொகைத் தேர்வு ஈ) மூன்றும் சரி
5. <u>பூவாது</u> காய்க்கும்,<u>மலர்க்கை</u> - அடிக்கோடிட்ட சொற்களுக்குரிய இலக்கணம் யாது?
   அ) பெயரெச்சம், உவமைத்தொகை ஆ) எதிர்மறைப் பெயரெச்சம், உருவகம்
   இ) வினையெச்சம், உவமை ஈ) எதிர்மறை வினையெச்சம், உவமைத்தொகை
6. பல்லவர் காலச் சிற்பக்கலைக்குச் சிறந்த சான்று ________
   அ) மாமல்லபுரம் ஆ) பிள்ளையார்பட்டி
   இ) திரிபுவனவீரேசுவரம் ஈ) தாடிக்கொம்பு
7. இந்திய தேசிய இராணுவத்தை ..............இன் தலைமையில் ................. உருவாக்கினர்.
   அ) சுபாஷ் சந்திரபோஸ், இந்தியர் ஆ) சுபாஷ் சந்திரபோ ஸ், ஜப்பானியர்
   இ) மோகன்சிங், ஜப்பானியர் ஈ) மோகன்சிங், இந்தியர்
8. திருநாதர்குன்றில் ஒரு பாறையில் புடைப்புச் சிற்பங்களாக உள்ளவை _____
   அ) விலங்கு உருவங்கள் ஆ) தீர்த்தங்கரர் உருவங்கள்
   இ) தெய்வ உருவங்கள் ஈ) நாட்டியம் ஆடும் பாவை உருவங்கள்
9. உலகப் பொதுமறை எனப் போற்றப்படும் நூல் _________
   அ. நாலடியார் ஆ) திருக்குறள் இ) மதுரைக்காஞ்சி ஈ) சீவகசிந்தாமணி
10. நாளிகேரம் என்பதன் பொருள் _____________
    அ) செல்வம் ஆ) முயற்சி இ) தென்னை ஈ) ஆலமரம்
11. இளங்கமுகு, செய்கோலம் - இலக்கணக்குறிப்புத் தருக.
    அ) உருவகத்தொடர், வினைத்தொகை ஆ) பண்புத்தொகை, வினைத்தொகை
    இ) வினைத்தொகை, பண்புத்தொகை ஈ) பண்புத்தொகை, உருவகத்தொடர்

பாடலைப் படித்து வினாக்களுக்கு (12,13,14,15) விடையளிக்க:-

அள்ளல் பழனத்து அரக்காம்பல் வாயவிழ
வெள்ளம்தீப் பட்ட(து) எனவெரீஇப் புள்ளினம்தம்
கைச்சிறகால் பார்ப்பொடுக்கும் கவ்வை உடைத்தரோ
நச்சிலைவேல் கோக்கோதை நாடு

12. இப்பாடல் இடம் பெற்ற நூல்

அ. தமிழ்விடு தூது ஆ. பெரியபுராணம் இ. முத்தொள்ளாயிரம் ஈ. இராவண காவியம்

13. இப்பாடலில் இடம் பெற்றுள்ள அடி எதுகைகள்__________

அ. அள்ளல் – வெள்ளம் ஆ. கவ்வை – கோக்கோதை

இ. ஆம்பல் – புள்ளினம் ஈ.சிறகால் – நச்சிலைவேல்

14. 'அள்ளல் ' என்பதன்பொருள்__________

அ. பாக்கு ஆ. முத்து

இ. சேறு ஈ. சங்கு

15. 'வெரீஇ' – இச்சொல்லில் இடம்பெறும் அளபெடை

அ. சொல்லிசைஅளபெடை ஆ. செய்யுளிசைஅளபெடை

இ. இன்னிசைஅளபெடை ஈ. உயிரளபெடை

## பகுதி – II ( மதிப்பெண்கள் : 18 )

**பிரிவு – 1 எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.**
**(21 ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.)** 4×2=8

16. **விடைக்கேற்றவினாஅமைக்க**

அ. கல்வி கற்ற பெண்கள் பண்பட்ட நன்செய் நிலத்தினைப் போன்றவர்கள்.

ஆ. சோழநாட்டின் யானைபடை வலிமையானது.

17. "கூவல்" என்று அழைக்கப்படுவது எது?

18. நீங்கள் வாழும் பகுதியில் ஏறுதழுவுதல் எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகிறது?

19. கனவிலும் இனிக்காதது எவர் நட்பு?

20. கண்ணன் புகுந்த பந்தல் எவ்வாறு இருந்தது?

21. மிகுதியான் – எனத் தொடங்கும் குறளை எழுதுக.

**பிரிவு – 2 எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**

22. **தொடரைப் பழமொழி கொண்டு நிறைவு செய்க.** 5×2=10

அ) இளமையில் கல்வி ______________

ஆ) கற்றோருக்குச் சென்ற ___________

23. **பிழை நீக்கி எழுதுக.** அ) நல்ல தமிழுக்கு எழுதுவோம்.

ஆ) துன்பத்தால் பொறுத்துக்கொள் பவனே வெற்றி பெறுவான்.

24. **மரபுப்பிழையை நீக்கி எழுதுக.**

அ) இல்லத்தின் அருகே புதிததாகக் கூரை போட்டனர்.

ஆ) கொடியிலுள்ள மல்ரை எடுத்து வா.

25. **ஒரு சொல்லால் தொடரின் இரு இடங்களை நிரப்புக. (அகல், கால், அலை)**

அ) எனக்கு _______ பங்கு பிரித்துக் கொடுக்க வா! கீழே ஈரம்: பார்த்து உன்_____ ஐ வை.

ஆ) கைப்பொருளைக் கடல் _______யில் தொலைத்துவிட்டு, கரையில் தேடி ______ந்தால் கிடைக்குமா?